2. ஒத்திவைப்புத் தீர்மானம்

இராணிப்பேட்டை பாரி கம்பெனி தொழிற்சாலை மூடப்பட்டதும், தொழிலாளர் அல்லலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களும், திரு. சி. கோவிந்தராசன் அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ராணிப்பேட்டையிலுள்ள பாரி கம்பெனித் தொழிலாளர்களுக்கும், கம்பெனி நிர்வாகத்திற்கும் சச்சரவு எற்பட்டதைத் தொடர்ந்து, கம்பெனி நிர்வாகம் சென்ற 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதியிலிருந்து தொழிற்சாலையை மூடி, 2,500 தொழிலாளர்களுக்கு வேலையற்ற நிலையை உண்டாக்கியுள்ளதோடு, உற்பத்திப் பாதிப்பும் ஏற்பட்டுள்ள விஷயத்தை விவாதிக்க வேண்டும் என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி கதவடைப்பு முதலியவை காரணமாகக் கருதி, இந்தப் பேரவை நிகழ்ச்சிகளை ஒத்திவைப்பது கூடாது என்று ஏற்கனவே பலமுறை தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

3. நவடமுறைக் கேள்விகள்

(அ) டெல்லியில் மைய அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து பேரவைக்கு முதலமைச்சரின் அறிக்கை.

DR. H. V. HANDE : Sir, I rise on a point of order. I want to know whether the Hon. Chief Minister, after his recent trip to Delhi, is going to make a statement about the discussions he had there with the Central Ministers and if so, whether the Chair would allow discussion for at least a few hours so that we can give proper suggestions with regard to drought and other problems which are facing the State of Tamil Nadu. Will the Hon. Chief Minister kindly indicate when exactly he is going to make a written statement or oral statement......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் என்ன பாயிண்டு ஆப் ஆர்டர் இருக்கிறது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்ல வேண்டும். எந்த விதியின்கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டும், கொடுக்காமல் விட்டுவிட்டார் ? அமைச்சர்கள் விரும்பினால்தான் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டுமே ஒழிய, அவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டுமென்ற விதி இல்லை. அவர்கள் விரும்பினால்தான் கொடுக்கலாம். அதை உறுப்பினர்கள் கேட்பதற்கு உரிமை இல்லை. ஆகவே, இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் எழவில்லை. இது எந்த விதியின்கீழ் வருகிறது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் விளக்கவேண்டும்.

DR. H. V. HANDE : Sir, after the Question Hour, a Member has got a right to ask, with the permission of the Chair..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எங்கே இருக்கிறது ? நீங்கள் பாயிண்டு ஆப் ஆர்டர் என்று எழுந்தீர்கள். முதல் அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டும். கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள். அவர்கள் விரும்பினால்தான் கொடுக்கலாம் என்று நான் சொன்னேன். உறுப்பினர்கள் அப்படி அமைச்சர்கள் ஏன் ஸ்டேட்மெண்டு கொடுக்க வில்லை என்று விளக்கம் கேட்பதற்கு எங்கே இடம் இருக்கிறது ? அங்கத்தினர்களுக்கு அந்த உரிமை எந்த விதியின்கீழ் கொடுக்கப் பட்டிருக்கிறது ? அதைச் சொல்லுங்கள். (சிறிது நேரம் கழித்து) எந்த விதியிலும் இல்லை.